# WORD OF CHRIST

# [ கிறிஸ்துவின் வசனம் ]

கொலோ 3:16

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | | ஏப்ரல் |
| சகோ. அர்ச்சுனன் | 11 கொரி 3:6 | 1993 |

வாசகர்களுக்கு,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும், சமாதானமும் உண்டாவதாக!

தொடர்ந்து இவ்விதழை வெளியிடச்செய்த தேவனுக்கு ஸ்தோத்திரமும், உற்சாகப்படுத்திய உங்களுக்கு என் வாழ்த்துகளை-யும் தெரியப்படுத்திக்கொள்கிறேன். இவ்விதழில் வெளிவரும் செய்தி, வேத அறிவுப்போட்டியில் உங்களுக்கு சந்தேகங்கள் இருந்தால் உடனே எமக்கு எழுதி சந்தேகங்களை தீர்த்துக்கொள்ளுங்கள். இவ்விதழ் உங்களுக்கு இலவசமாக அனுப்பப்டுகிறது. மற்றவர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறேன்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை நம் அனைவரோடுங்கூட இருப்பதாக! ஆமென்!

ஆசிரியர்.

## HOW TO BE A CHRISTIAN

## (ஒரு கிருஸ்தவனாக இருப்பது எப்படி)

தேவனாகிய கர்த்தர் பரிசுத்தவான்கள் மூலம் சொல்லப்பட்டிருக்-கிற காரியங்களை தியானிப்போம் அப்போஸ்தலானிய பவுல்தீத்துவுக்கு எழுதும்போது நாம் அவபக்தியையும், லௌகீக இச்சைகளையும் வெறுத்து தெளிந்தபுத்தியும் நீதியும், தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜிவன்பண்ணி (தீத்து 2:12) எனவாசிக்கிறோம் அருமையான தேவபிள்ளைகளே நீங்கள் அவபக்தியையும், இவ்வுலகஇச்சைகளையும், வெறுத்திருக்கிறீர்களா? இவ்வுலகத்தில் இருக்கிற ஒரு பொருளும் உங்களை திருப்திசெய்வதில்லை, நித்திய ஜீவனுக்கு வழிநடத்தப் போவதில்லை அப்படியிருக்க சகோதரரே!

நீங்கள் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களைமுன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்கிறேன்

இதுவே நீங்கள் செய்யதக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல் தேவனுடைய தன்மையும் பிரியமும், பரிபூரணமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத் தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதனாலே மறுரூபமாகுங்கள் என்று (ரோமர் 12:1;2) வாசிக்கிறோம், உங்கள் சரீரங்களை பரிசுத்தமான ஜீவபலியாக அவருக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறீர்களா? உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்கள் என்று அறியீர்களா? பிரிய சகோதரனே! உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக் கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது(யாக் 1:27) மற்றவர்களால்தான் நான் கெட்டேன் என்று சொல்லுகிறீர்களா? முதலாவது உங்களை உலகத்தால் கறைபடதாபடி காத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது நீங்கள் ஒரு கிறிஸ்தவனாக இருக்கமுடியும்.

ஒருவன் இவ்வுலக ஆஸ்தியை உடையவனாய் இருந்து தன் சகோதரனுக்குக் குறைச்சல் உண்டென்று கண்டு தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக் கொண்டால் அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி? என் பிள்ளைகளே, வசனத்தினாலும், நாவினாலுமல்ல உண்மையினாலும் அன்பு கூரக்கடவோம் என்று [1 யோவ 3:17,18] வாசிக்கிறோம். இவ்வசனத்தைப் படிக்கிறவர்களாக மாத்திரம் அல்ல, நடைமுறையில் செயல்படுத்த வேண்டும், வசதிகள் இருந்தும் குறைச்சலுள்ள மற்ற சகோதரர்களுக்குக் கொடுக்க மனதில்லாதிருந்தால் எப்படி? வேதம் என்ன சொல்லுகிறது, உலகத்தில் நாம் ஒன்றும் கொண்டு வந்ததில்லை நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை மேலும் மாமிசத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன. அவையாவன விபசாரம் வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம் விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள் சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள் களியாட்டுகள் முதலானவைகளே [கலா5:19-21] இப்படிப்பட்டவைகளை செய்கிறவர்கள் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை என்று மிக தெளிவாக சொல்லப் படுகிறதே!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடம் ஒருவாலிபன் வந்து ஒரு கேள்வி கேட்டான். நல்ல போதகரே நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையை செய்ய வேண்டும் என்று. அதற்கு அவர் நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன். தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள் (மத் 19;16,17) அன்பான தேவபிள்ளையே நீயும் ஒரு கிறிஸ்தவனாக வாழ வேண்டுமானால் அவருடைய கற்பனைகளைக்கைக்கொள் லௌகீக ஞானத்தினாலும் மாயமான தந்திரத்தினாலும் ஒருவனும் உங்களை கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் (கொலோ 2:8) கர்த்தர் உங்களை வழிநடத்துவாராக!

ஆமென்

### ★ சபை செய்திகள்

மார்ச் மாதம் 24ம் தேதி பெண்களுக்கான சிறப்பு வேதப் பயிற்சிக் கூட்டம் இனிதே நடைபெற்றது.

### ★ ஜெபம் பண்ணுங்கள்

வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையாருகளுக்கு கல்லறை தோட்டம் கிடைக்க

### ★ பரிசு

மார்ச் இதழின் வேத அறிவுப்போட்டியில் பரிசு பெறுபவர்கள்

1] தமிழ்வாணன் - அம்பிளிக்கை
2] தயாளன் வத்தலக்குண்டு
3] பவுல் "
4] காஸ்பல் "
5] ஸ்டெல்லா - வத்தலக்குண்டு
6] கலைவாணி "
7] கிறிஸ்டினாதனசீலி பெருமாள்பட்டி
8] அமுதா சொக்கலிங்கபுரம்

### ★ மார்ச் இதழின் விடைகள்

1] ஆக்கினைத்தீர்ப்பில்லை ரோ 8;1
2] இயேசு மத் 19;23
8] 430 வருஷம் யாத் 12;40
4] பேசக்கூடாது 1 கொரி 14;28
5] அம்ராம் யாத் 6;20
6] பண்ணக்கூடாது
7] கொள்ளக்கூடாது
8] எல்லாருக்கு முன்பாகச் சுட்டெரித்தார்கள்
9] ஆட்டு மந்தையைப்போல
10] உண்டாக்கக்கூடாது.

கிறிஸ்துவின் வசனம்

## ★ இம்மாத வேத அறிவுப் போட்டி

1. என் கண்ணிரே எனக்கு உணவாயிற்று என்று யார் சொன்னது?
2. ஒரு தாலந்தை வாங்கினவன் என்ன செய்தான்?
3. அஞ்சல்காரர் என்று வேதத்தில் எங்கு இருக்கிறது?
4. விசுவாசம் எதனாலே வரும்?
5. எகிப்துக்குப் போன யாக்கோபின் குடும்பத்தார் எத்தனை பேர்?
6. பொய் சொன்ன அனனியா, சப்பீராள் என்ன ஆனார்கள்?
7. நோவாவின் பேழைக் கதவை அடைத்தது யார்?
8. ஐனிக்கேயாளுடைய மகன் பெயர் என்ன?
9. இரத்தம் புசிக்கலாமா?
10. பிரதான தூதனாகிய மிகாவேல் பிசாசுடனே தர்க்கித்துப்பேசின போது என்ன சொன்னான்?

முதல் ஐந்திற்கு வேத ஆதாரத்துடனும், கடை ஐந்திற்கு விடை மட்டும் கீழ்க்காணும் முகவரிக்கு ஒரு போஸ்ட் கார்டில் எழுதி இம்மாத இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி அனுப்பவும் சரியான விடை எழுதுபவர்க்கு பரிசு அனுப்பப்படும்.

## அழைப்பு

வேதத்தை முறையாக கற்று தேவனுக்கு ஊழியம் செய்ய விரும்புகிறவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**Bro. PETER SOLOMON**
DIRECTOR.
The National Bible College,
13. Sai Nagar Madras-82

If Undelivered Please Return To:
**THE EDITOR**
**Word of Christ, Post Box No. 5**
**BATLAGUNDU - 624202 Anna Dt.**

---

**For Private Circulation only.**

---

Published by Batlagundu church of Christ and
Printed at Shanthi Printers Batlagundu-624202.